செ.வெ.எண் .4

நாள். 2.11.2020.

# மாவட்ட ஆட்சியர் அவர்களின் பத்திரிக்கை செய்திகுறிப்பு

தாட்கோ மூலம் இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன்றன.

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர்க்கு குறுகிய கால (3 மாதம் முதல் 6 மாதம் வரை) பயிற்சியான மின் தொழில் நுட்பவியலாளர் (Electrical Technician) (10ம் வகுப்பு தேர்ச்சி) மற்றும் கள தொழில் நுட்ப வல்லுநர் பிற வீட்டு உபகரணங்கள் (Field Technician other home appliances) (8ம் வகுப்பு தேர்ச்சி) ஆகிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் முற்றிலும் கட்டணமில்லாமல் இலவசமாக வழங்கப்பட உள்ளது. மாணவ / மாணவியர்கள் பயிற்சி பெற சென்று வருவதற்கான பயணப்படி, போக்குவரத்து செலவு மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும். பயிற்சி முடிவில் பயிற்சி பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும். திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்று பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பெற்ற பயிற்சிக்கு ஏதுவாக தொழில் தொடங்கிட, தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். இலவச மானியத்துடன் கூடிய வங்கிகடன் வழங்கிட பரிந்துரை செய்யப்படும். **பயிற்சி நடைபெறும் இடம் ஸ்ரீ அம்மன் I.T.I. கட்டபெட்டு அஞ்சல், கோத்தகிரி தாலுக்கா, நீலகிரி - 643214. மேலும் விபரங்களுக்கு 7373736633 என்ற அலைபேசி மற்றும் 0423 - 2443064 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம்.** எனவே, இந்த அரிய வாய்ப்பினை நீலகிரி மாவட்டத்தை சார்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

2/2

29.10.20

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.